செ.வெ.எண் :776 நாள்: 24.11.2021

# தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து பேரூராட்சியிலும் ஒரு மாதிரி பூங்கா விரைவில் அமைக்கப்படும்-மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் தேர்வுநிலை பேரூராட்சியில் பல்வேறு வளர்ச்சிப் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் இன்று (24.11.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:-

பேரூராட்சி நிர்வாக துறையின் சார்பில், வல்லம் தேர்வுநிலை பேரூராட்சிக்கு உட்பட்ட வார்டு-3 சுப்பிரமணியன் கோவில் தெருவில் சுகாதார சிறப்பு தூய்மை பணி நடைபெற்று வருவதையும், அய்யனார் நகர் வளம் மீட்பு பூங்காவில் குப்பைகளை தரம் பிரிக்கும் மையத்தில் நடைபெற்றுவரும் பணிகளையும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் உரக்கிடங்கு மேம்பாடு செய்தல் பணியினையும், வல்லம் பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடம் சுகாதார முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறதா என்பது குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் அருணா குளம் மற்றும் திருவள்ளுவர் நகரில் ஒரு மாதிரி பூங்கா அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யும் பொருட்டு பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் பூங்கா அமைப்பது குறித்தும், அமைத்த பின் பராமரிப்பு பணிகளை குடியிருப்போர் நலச்சங்கம் பொறுப்பில் ஒப்படைப்பது குறித்தும் சம்பந்தப்பட்ட அலுவலரிடம் கேட்டறிய பட்டது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது வல்லம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.பிரகந்தநாயகி, உதவி பொறியாளர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**